# சர்வதேச சுற்றுலாதினம் - 2025 இனை முன்னிட்டு
# வடக்கு மாகாண சுற்றுலாப் பணியகம் நடாத்தவுள்ள போட்டிகள்

Northern Province Tourism Bureau

**பொதுவான நிபந்தனைகள்**

01) தனிப்பட்ட போட்டியாளர்கள் வடக்கு மாகாணத்தை நிரந்தர வசிப்பிடமாகக் கொண்டிருக்கவேண்டும்.
02) குழு போட்டிகளுக்கு விண்ணப்பிக்கும் நிறுவனம் வடக்கு மாகாணத்தில் பதிவுசெய்யப்பட்ட நிறுவனமாக இருத்தல் வேண்டும்.
03) Youtube காணொளி போட்டியில் இலங்கையின் எப் பிரதேசத்தில் வசிப்பவர்களும் பங்குபற்றலாம்.

## 01) நாட்டிய நாடகம் - வடக்கு மாகாண சுற்றுலாத் தலம்

- போட்டியாளர்கள் ஒரு சுற்றுலாத் தலத்தை தெரிவு செய்யவேண்டும்.
- இயற்கை. வரலாறு. அமைவிடம். பண்பாட்டு சிறப்பம்சங்கள் மற்றும் பேண்தகு தன்மையுடைய சுற்றுலாத் தலமாக பேணப்படுவதன் இன்றியமையாமை என்பவற்றை எடுத்துரைக்கும்வகையில் அமையவேண்டும்.
- நடனம் நாடகம் இரண்டும் பொருத்தமான முறையில் இணைக்கப்பட்டு வடிவமைக்கப்பட்டிருக்கவேண்டும்.
- வயது எல்லை - 15 இற்கு மேல்
- பங்கேற்பாளர்கள் எண்ணிக்கை - ஒரு குழுவில் 08 தொடக்கம் 20 பேர் வரை (ஆண் பெண் இருபாலர்)
- நேரம் - 15 - 20 நிமிடங்கள்
- பதிவுசெய்யப்பட்ட இசை வடிவங்கள் பயன்படுத்த முடியாது. அணி செய் கலைஞர்களுடன் (09 பேர்வரை) நேரடி இசை பயன்படுத்தவேண்டும்.
- மேடை அலங்காரம். மேடைப்பொருட்கள் குறைந்த அளவில் பயன்படுத்த வேண்டும்.
- பொருத்தமான ஆடை அணிகலன்கள் ஒப்பனைகள் பயன்படுத்த வேண்டும்.
- ஒலி ஒளி அமைப்பு ஏற்பாடு செய்து தரப்படும்.
- போட்டிக்கு விண்ணப்பிக்கும்போது நாட்டிய நாடக எழுத்துரு சமர்ப்பிக்கவேண்டும்.
- அதிகமான விண்ணப்பங்கள் கிடைக்குமிடத்து எழுத்துருக்கள் பரிசீலிக்கப்பட்டு தரமற்ற மற்றும் கருப்பொருளுக்குப் பொருத்தமற்ற எழுத்துருக்கள் நிராகரிக்கப்பட்டு போட்டியிலிருந்து விலக்கப்படுவீர்கள்.
- விண்ணப்ப முடிவுத் திகதி - 26.09.2025 •போட்டித்திகதி - 05.10.2025

**பரிசு விபரம்**
- முதலாமிடம் 50,000 ரூபா
- இரண்டாமிடம் 30,000 ரூபா
- மூன்றாமிடம் 20,000 ரூபா

## 02) நடனம் - பாரதியார் பாடல்

- பாரதியாரின் சமூகம் சார்ந்த / தோத்திரப் பாடல்கள் / புராணக் கதைகளில் ஒன்றினைத் தெரிவுசெய்யலாம்.
- வயது எல்லை - 15 வயதுக்கு மேல்
- பங்கேற்பாளர்கள் எண்ணிக்கை - ஒரு குழுவில் 03 முதல் 06 பேர் வரை
- நேரம் - 08 - 10 நிமடங்கள்
- பொருத்தமான இடங்களில் ஜதி. ஸ்வரக் கோவைகள் பயன்படுத்தலாம்.
- பாடல் கர்நாடக சங்கீத இசை வடிவில் அமைய வேண்டும்.
- பதிவுசெய்யப்பட்ட இசை வடிவங்கள் பயன்படுத்த முடியாது. அணிசெய் கலைஞர்களுடன் (04 பேர் வரை) நேரடி இசை (நட்டுவாங்கம். பாடகர். மிருதங்கம். வயலின்/ புல்லாங்குழல்/வீணை) பயன்படுத்த வேண்டும்.
- பரதநாட்டிய ஆற்றுகைக்குப் பொருத்தமான ஆடை அணிகலன்கள் அணியவேண்டும்.
- விண்ணப்ப முடிவுத் திகதி - 26.09.2025 • போட்டித்திகதி - 06.10.2025

**பரிசு விபரம்**
- முதலாமிடம் 20,000 ரூபா
- இரண்டாமிடம் 10,000 ரூபா
- மூன்றாமிடம் 5,000 ரூபா

## 03) Youtube காணொளி உருவாக்கம்

- போட்டி வகை: ஆகக் குறைந்தது 1000 சந்தாதாரர்களைக் கொண்ட Youtube தளங்களிற்கான போட்டி.
- கருப்பொருள்: "வடக்கு மாகாணத்தின் அதிகம் அறியப்படாத சுற்றுலாத் தலங்கள்" (Any unknown/lesser known Tourist Sites in Northern Province) என்ற கருப்பொருளின் கீழ். சர்வதேச அளவில் இன்னும் பிரபல்யம் அடையாத அல்லது பெரிதும் அறியப்படாத வடக்கு மாகாணத்திலுள்ள சுற்றுலா இடங்களை நீங்கள் காட்சிப்படுத்த வேண்டும்.
- வீடியோ மொழி: காணொளியின் உரை (Voice-over) அல்லது வசனங்கள் (Subtitles) கண்டிப்பாக ஆங்கிலத்தில் இருக்க வேண்டும்.
- வீடியோ நீளம்: காணொளி குறைந்தது 4 நிமிடங்களும். அதிகபட்சம் 7 நிமிடங்களும் இருக்க வேண்டும்.
- வீடியோ வடிவம்: காணொளி MP4 அல்லது MOV வடிவத்திலும். Full HD (1920x1080) தரத்திலும் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
- சமர்ப்பிக்கும் முறை : பேட்டியின் இறுதிநாளான 30.09.2025 பிற்பகல் 2.00 மணிக்கு முற்பட்ட 12 மணித்தியாலத்துக்குள் தங்கள் Youtube தளத்தில் போட்டிக் காளொளியை தரவேற்றி காணொளி இணைப்பை tourismnorth.srilanka@gmail.com என்ற எமது மின்னஞ்சல் முகவரிக்கு விண்ணப்பப் படிவத்துடன் அனுப்பிவைக்க வேண்டும்.
- ஒரு Youtube தளத்தின் பெயரில் ஒரு காணொளியை மட்டுமே சமர்ப்பிக்க வேண்டும்.
- காணொளியில் பயன்படுத்தப்படும் காட்சிகள். போட்டியாளரால் சுயமாகப் படம்பிடிக்கப்பட்ட அசல் காட்சிகளாக இருக்க வேண்டும்.
- பதிப்புரிமை மீறல்கள் கண்டிப்பாக அனுமதிக்கப்படாது.
- பின்னணி இசை. படங்கள் அல்லது வரைபடங்கள் போன்றவை royalty-free (எவ்வித கட்டணமும் இல்லாதவை) ஆக இருக்க வேண்டும்.
- அரசியல். மத வெறுப்புணர்ச்சி அல்லது இழிவான கருத்துக்களைப் பரப்பும் எந்தவொரு உள்ளடக்கமும் காணொளியில் இருக்கக்கூடாது.
- ஏற்கனவே வேறு எந்தப் போட்டிக்கும் சமர்ப்பிக்கப்பட்ட காணொளியை மீண்டும் சமர்ப்பிக்கக் கூடாது.
- சமர்ப்பிக்கப்படும் காணொளியின் ஆரம்பத்தில் சர்வதேச சுற்றுலா தினம் 2025 இனை முன்னிட்டு வடக்கு மாகாண சுற்றுலாப் பணியகம் நடாத்தும் Youtube காணொளிப் போட்டி என குறிப்பிட வேண்டும். காணொளியின் முடிவில் சுற்றுலாப் பணியக Youtube தளத்தை Tag செய்யும் வகையில் அமைந்திருக்க வேண்டும்.
- போட்டிக்கு சமர்ப்பிக்கும் காணொளிகளில் சிறந்ததாகக் கருதப்படுபவை வடக்கு மாகாண சுற்றுலாப் பணியகத்தின் அதிகாரபூர்வமான விளம்பர மற்றும் ஊடக நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தும் உரிமை வழங்கப்பட்டிருக்கவேண்டும்.

**பரிசு விபரம்**
- முதலாமிடம் 50,000 ரூபா
- இரண்டாமிடம் 30,000 ரூபா
- மூன்றாமிடம் 20,000 ரூபா

## 04) திட்ட முன்மொழிவு

- கருப்பொருள் - வடக்கு மாகாணத்தில் சுற்றுலாவை மேம்படுத்துவதற்கான சிறந்த திட்ட முன்மொழிவு தயாரித்தல்
- போட்டிக்கு விண்ணப்பிப்பவர்கள் இலங்கையின் வடக்கு மாகாணத்தில் வசிப்பவராக இருக்க வேண்டும்.
- வடிவம்: கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பிரதியாக சுற்றுலாப் பணியக முகவரிக்கோ அல்லது PDF கோப்பாக மின்னஞ்சல் ஊடாகவோ சமர்ப்பிக்கவும்
- நீளம்: 1500 சொற்களுக்கு மேற்படாததாக இருக்க வேண்டும்.
- சமர்ப்பிக்கப்படும் ஆவணத்துடன் போட்டியாளரின் தனிப்பட்ட விவரங்கள் (பெயர். முகவரி. தொலைபேசி எண்) இணைத்து அனுப்பவேண்டும்.
- ஒரு போட்டியாளர் ஒரு முன்மொழிவை மட்டுமே சமர்ப்பிக்க வேண்டும்.
- சமர்ப்பிக்கப்படும் முன்மொழிவு சமர்ப்பிப்பவரின் சொந்த படைப்பாக இருக்க வேண்டும்.
- ஏற்கனவே வெளியிடப்பட்ட அல்லது வேறு போட்டிகளில் பயன்படுத்தப்பட்ட திட்டங்கள் ஏற்றுக்கொள்ளப்படாது.
- சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள் வடக்கு மாகாண சுற்றுலாப் பணியகத்தின் சொத்தாகக் கருதப்படும். அவற்றை எதிர்கால மேம்பாட்டுத் திட்டங்களுக்குப் பயன்படுத்த முழு உரிமை பணியகத்திற்கு உண்டு.
- திட்டங்கள் சமர்ப்பிக்கவேண்டிய இறுதித் திகதி – 30.09.2025

**பரிசு விபரம்**
- முதலாமிடம் 15,000 ரூபா
- இரண்டாமிடம் 10,000 ரூபா
- மூன்றாமிடம் 5,000 ரூபா

## 05) சித்திரப் போட்டி

- கருப்பொருள் : தூரிகையினூடு வடக்கு மாகாண சுற்றுலாத்துறை
- போட்டி வகை : 01) பாடசாலை மாணவர்கள் (தரம் 10. தரம் 11. தரம் 12. தரம் 13)
  02) திறந்த போட்டி
- ஊடகம் : நீர் வர்ணம் (water colour) அல்லது எண்ணெய் வர்ணம் (oil colour). வர்ணம் (Pastel)
- படம் வரைய வேண்டிய தாளின் அளவு : A 3 (11.7 inch X 16.5 inch) அளவு தாள்
- மேற்படி எண்ணக்கருவில் அமைந்த சித்திரத்தினை எம்மால் அறிவிக்கப்படும் ஒரு திகதியில். குறிப்பிட்ட இடத்திற்கு வருகை தந்து. குறிப்பிட்ட நேரத்தினுள் வரைதல் வேண்டும்.
- வரையப்படும் சித்திரங்கள். படைப்பாளிகளின் சுய ஆக்கமாக இருத்தல் வேண்டும் என்பதுடன். வரையப்பட்ட சித்திரங்களை சுற்றுலாப் பணியகத்திற்கு கையளித்தல் வேண்டும்.
- சுற்றுலாப் பணியகத்தினால் நியமிக்கப்படும் நடுவர் குழுவினால் தீர்மானிக்கப்படும் முடிவுகளின் அடிப்படையில் பரிசில்கள் வழங்கப்படும். நடுவர் குழுவின் தீர்ப்பே இறுதியானது.
- விண்ணப்ப முடிவுத் திகதி – 26.09.2025
- போட்டித் திகதி : விண்ணப்பதாரர்களுக்கு பின்னர் அறிவிக்கப்படும்.

**பரிசு விபரம்**
- முதலாமிடம் 15,000 ரூபா
- இரண்டாமிடம் 10,000 ரூபா
- மூன்றாமிடம் 5,000 ரூபா


**விண்ணப்பங்களை அனுப்பவேண்டிய முகவரி :**
**பணிப்பாளர், சுற்றுலாப் பணியகம், வடக்கு மாகாணம், ஏ9 வீதி, கைதடி.**
**மின்னஞ்சல் :** tourismnorth.srilanka@gmail.com


**போட்டிக்கான விண்ணப்பப் படிவங்களை வடக்கு மாகாண சுற்றுலாப் பணியக இணையத்தளத்தில் https://tourismnorth.lk/downloads பக்கத்திலோ அல்லது QR இணைப்பினூடாகவோ தரவிறக்கலாம்.**


**மேலதிக தொடர்புகளுக்கு : சுற்றுலாப் பணியகம், வடக்கு மாகாணம், ஏ9 வீதி. கைதடி.**
**தொலைபேசி : 0212217311 மின்னஞ்சல் :** tourismnorth.srilanka@gmail.com